<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>

<u>அசல் வழக்கு எண். 67/2020</u>

இந்நீதிமன்ற எழுத்தர் திரு. மோகன், Bench Clerk என்பவரால் முறையோடு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் 1 ஆம் சாட்சியத்தின் வாக்குமூலம் 1875 ம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரையறைகளுக்கு உட்பட்டு 2023ம் ஆண்டு ஜூலை திங்கள் 17-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர். கருணாகரன் (PW2)<br>வயது. | நாள்.17.07.2023 |
| த/பெ. கன்னியப்பன் | தொழில் |
| கிராமம் | வட்டம், |

<u>வா.சா.2 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>

1. தாவா சொத்தை எனது தந்தை யாரிடமிருந்து வாங்கினார் என்றால் கோபால் என்பவரிடமிருந்து வாங்கினார். எனது தந்தை எந்த சர்வே எண்களை கிரையமாக பெற்றார் என்றால் சர்வே எண். 84/1 ல் 39 செண்டில் 20 செண்டை வாங்கியுள்ளார். சர்வே எண். 84/2 ல் 137 செண்டில் 92 செண்டை வாங்கியுள்ளார். மொத்தம் 1 ஏக்கர் 12 செண்டை வாங்கியுள்ளார். 1955 ம் வருடம் மேற்சொன்ன சொத்துக்களை எனது தந்தை கிரையம் பெற்றுள்ளார்.

2. தாவா சொத்துக்களை கோபால் என்பவர் யாரிடம் கிரையம் பெற்ற ஆவணமான தாய் பத்திரத்தை ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. தாவா சொத்திற்கு ஆதியில் கோபாலுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றாலும் அதனால் கோபாலும் எனது தந்தையும் சேர்ந்து மோசடி செய்து தாவா சொத்துக்கு ஆவணங்கள் தயார் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

4. தாவா சொத்திற்கு கோபால் பெயரில் பட்டா இருந்ததா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு எனது தந்தை கன்னியப்பன் பெயரில் உள்ள பட்டாவை ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

5. தாவா சொத்து எனது தந்தை பெயரில் உள்ளதை நிரூபிக்க அவர் பெயரில் உள்ள பட்டா கிரைய பத்திரம் மற்றும் எனது தந்தை பெயரில் உள்ள அனைத்து வருவாய் ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன்.

6. எனது தந்தை இறந்துவிட்டபடியால் அவரது இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அவரின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

7. அவ்வாறு வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8. மனோகரன் என்பவர் எனது அண்ணன் ஆவார். தீன பாரதன் எனது தம்பி ஆவார். தீன பாரதன் என்பவரின் வாரிசு சான்றிதழை நான் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். எனது அம்மா அமுதாவின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு வாரிசு சான்றிதழ்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், முறையான தரப்பினர்களை சேர்க்காமல் இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9. தாவா சொத்து என்ன வகையான நிலம் என்றால் நஞ்சை நிலம் ஆகும். தாவா சொத்து புஞ்சை நிலம் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி மங்களலட்சுமி எனது உறவினர் என்றால் சரியல்ல.

10. மங்களலட்சுமி தாவா சொத்தில் எப்போது அத்துமீறி உள்ளே நுழைந்தார் என்றால் 2014 ம் ஆண்டு தேதி சரியாக நினைவில்லை. தாவா சொத்துக்கான ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதி மங்களலட்சுமி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல.

11. தாவா சொத்தை மங்களலட்சுமி மற்றும் பாலசுந்தரம் ஆகியோர் இன்று வரை அனுபவித்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தை மங்களலட்சுமி கண்ணம்மாள் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நாங்கள் தான் கோபால் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளோம்.

12. 14/03/1965 ல் மங்களலட்சுமி கண்ணம்மாள் மற்றும் முனுசாமி செட்டியார் ஆகியோரிடமிருந்து தாவா சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் அதை மறைத்து நான் பொய்யான ஆவணங்களை தயார் செய்து தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. இவ்வழக்கை என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளோம் என்றால் தாவா சொத்து எங்களுடையது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்து எங்களுக்கு மட்டும் தான் சொந்தம் என்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றாலும் அதை தவிர வேறு பரிகாரங்கள் எதையும் கோரவில்லை என்றால் சரிதான்.

14. தற்போது தாவா சொத்தில் என்ன பயிர் விளைவித்துள்ளேன் என்றால் தற்போது எதுவும் இல்லை. 24/01/1989 ம் வருடம் தாவா

சொத்தில் பயிர் வைப்பதற்காக மங்களலட்சுமி வேளாண் கடன் பெற்றுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

15. இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பும் தாக்கல் செய்தபோதும் மங்களலட்சுமி மற்றும் பாலசுந்தரம் தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

16. நானும் எனது தந்தை கண்ணியப்பன் மற்றும் கோபால் இணைந்து பொய்யான ஆவணங்கள் தயார் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

17. தாவா சொத்தை தற்போது வரை பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், தாவா சொத்தை நான் தான் அனுபவித்து வருகிறேன் என்று தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது)

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/- Tmt. N. Preethi.,
DM Cum JM
Cheyyur